கௌரி புண்ணியமூர்த்தி, விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## மட்டக்களப்பு பிராமிக் கல்வெட்டுக்களில் தான செய்திகள்

முற்காலத்தில் வாழ்ந்த மக்கள் தமது காலச் செய்திகளை கற்களிலும் செப்புத் தகடுகளிலும் இன்னும் பல பொருட்களிலும் எழுதி வைத்தனர். அவை பிற்காலத்தில் ஒரு ஆவணமாகக் கருதப்படும் என்று அவர்கள் எண்ணியிருக்கவில்லை. இத்தகைய சாசனங்கள் உலகம் பூராகவும் பரவிக் கிடக்கின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு தேசத்தில் பிராமிக் கல்வெட்டுக்கள், மத்திய காலக் கோயிற் கல்வெட்டுக்கள் என அதிகமானவை உள்ளன. இவற்றில் பிராமிக் கல்வெட்டுக்கள் மாத்திரம் இவ்வாய்விற்குட்படுத்தப்படுகின்றன.

இலங்கைத் தமிழர் பூர்வீக காலம் முதலாக செறிந்து வாழ்ந்த பிரதானமான நிலப்பகுதிகளில் மட்டக்களப்பு தேசமும் ஒன்றாகும். இங்கு மட்டக்களப்பு தேசம் என நாம் குறிப்பிடுவது கிழக்கிலங்கையில் வடக்கே வெருகலாற்றையும் தெற்கே குமுக்கன் நதியையும் எல்லைகளாகக் கொண்ட தற்போதைய மட்டக்களப்பு, அம்பாறை எனும் இரு மாவட்டப் பிரிவுகளையுமேயாகும். 1962ம் ஆண்டு இந்நிலப்பரப்பு மட்டக்களப்பு, அம்பாறை எனும் இரு நிருவாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஆயினும் பூர்வீக காலத்தைக் கருத்திற் கொண்டு பழைய மட்டக்களப்பின் அனைத்துப் பகுதிகளையும் இவ்வாய்வு உள்ளடக்கியுள்ளது.

இலங்கையின் ஆரம்ப கால வரலாறானது ஐதிகங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. எனினும் தொல்லியலில் ஏற்பட்ட வளர்ச்சி இந்நிலையில் மாற்றங்களை உண்டுபண்ணி ஆதாரங்களுடனான வரலாற்றைக் கட்டியெழுப்பியுள்ளது. அந்தவகையில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலம் முதலாக ஈழத்தில் எழுத்தறிவுமிக்க மனித சமுதாயமொன்று வாழ்ந்தமைக்கு இங்கு கிடைக்கின்ற சாசனங்களே சான்றாகின்றன.

கல்வெட்டுக்கள் பல வகைப்படும். சில கல்வெட்டுக்கள் நீளமாக, அதிக விவரங்களை உள்ளடக்கியுள்ள அதேநேரம் சில குறிப்பாக பிராமிச் சாசனங்கள் மிகச்சிறியனவாகக் காணப்படுகின்றன. இவை யாவற்றிலும் பொதுவாக அரசன் முதலான உயர்நிலையில் உள்ளோரும், சமூகத்தின் ஏனைய நிலைகளில் உள்ளோரும் வழங்கிய தானங்கள் தொடர்பான செய்தியைப் பதிவு செய்கின்றன. எனினும் இவற்றிலிருந்து அக்கால அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம், மொழி, எழுத்து வளர்ச்சி முதலான பல்வேறு விடயங்களையும் தெரிந்து கொள்ள முடிகின்றது. எனவே ஒரு தேசத்தின் வரலாற்றை வெளிக் கொண்டு வருவதில் கல்வெட்டுக்களின் பங்கு மிக முக்கியமானதாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுக்கள் தொடர்பான ஆய்வு காலத்தின் தேவையாக

உள்ளது. மட்டக்களப்பில் காணப்படுகின்ற இக்கல்வெட்டுக்களில் வழங்கப்பட்ட தானப் பொருள், தானம் பெற்றோர், தானம் வழங்கியோர் பற்றிய ஆய்வாக இது அமைகின்றது.

மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை. பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்து விடுகின்றான். போட்டியும் பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்லும் குணங்களாகும். வள்ளுவர் கொடை பற்றிக் குறிப்பிடுகின்றவிடத்து
“ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு” என்கின்றார். அந்தவகையில் புராதன காலம் முதல் மனிதன் தானம் செய்யும் பண்புடையவனாகக் காணப்படுகின்றான்.

**பிராமிக் கல்வெட்டுக்கள்**

கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை தென்னாசியத் துணைக்கண்டத்தில் எழுதப்பட்டுள்ள ஆவணங்கள் எல்லாம் பிராமி எனும் வகைக்குரிய வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன. இலங்கையில் 2000க்கு மேலான பிராமி சாசனங்கள் உண்டு. இவை பெரும்பாலும் மலைகளிலும் பெருங்கற்பாறைகளிலும் குகைத்தளங்களிலும் வெட்டப்பட்டுள்ளன. இவற்றிலே காணப்படும் சொற்களும் சொற்றொடர்களும் பெரும்பாலும் பொதுவானவை. இவற்றில் பெரும்பாலனவை ஓரிரு வரிகளில் பௌத்த குருமாருக்கு, பௌத்த சங்கத்திற்கு அக்காலச் சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள் அளித்த நிலம், கால்வாய், குகை, கற்படுக்கை, உணவு போன்ற தானங்கள் பற்றிக் கூறுகின்றன. இவற்றில் பலவற்றில் தானமளித்தவர் பெயரோடு அவரின் வம்சம், பட்டம், பதவி, தொழில், சமயம், இனம் போன்றவையும், அவர்கள் வாழ்ந்த இடம், ஊர் போன்ற செய்திகளும் கூறப்படுகின்றன.[1]

இக்கல்வெட்டுக்களில் இரு படைகள் உள்ளன. ஒன்று தமிழகம், ஈழம் ஆகிய பகுதிகளில் வழக்கிலிருந்த பழைய பிராமி வடிவம். இது திராவிடி அல்லது தமிழி எனப்படும். இரண்டாவது பிராமிக் கல்வெட்டுக்களின் அடித்தளமாக விளங்கிய இவற்றின் மீது பௌத்தத்துடன் வடஇந்தியாவிலிருந்து வந்த பிராமி வடிவம் செல்வாக்குச் செலுத்திய போது ஏற்பட்ட வடிவமாகும். இவற்றில் பிராந்திய வழக்கான மொழிச் சொற்கள் பல கலந்துள்ளன. இக்கல்வெட்டுக்கள் இலங்கையின் குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய மொழி, எழுத்து, சமயம், பண்பாடு, சமூகம், இடப்பெயர் என்பவற்றை அறிந்து கொள்ளவும், சமகாலப் பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றின் நம்பகத் தன்மையை மதிப்பிடவும் உதவுகின்றன.

**பிராமிக் கல்வெட்டுக்களில் தானம் பற்றிய செய்திகள்**

**1. தானப் பொருள்**

1970இற்கு முன்னர் பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் இப்பிராந்தியத்தில் ஏறத்தாழ 160 பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டன. இவற்றில் பெரும்பாலனவை ஓரிரு வரிகளில் பௌத்த குருமாருக்கு, பௌத்த சங்கத்திற்கு உபாசகர் நிலையிலிருந்த மக்கள் அளித்த குகை, கற்படுக்கை ஆகிய தானங்கள் பற்றிக் கூறுகின்றன. ஏனெனில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் இதுவரை காலமும் முழுமையான தொல்லியல் அகழ்வாய்வுகள் நடத்தப்படவில்லை. பெருமளவில் மேலாய்வுகளே நடைபெற்றுள்ளன. எனவே கிடைக்கப்பெற்ற சாசனங்கள் அனைத்தும் காடுகளிலும் குன்றுகளிலுமே கிடைத்துள்ளன. எனவே இவை குகைத்தளங்களில் வெட்டப்பட்டுள்ளமையால் குகை மற்றும் கற்படுக்கை என்பவற்றை தானமாக வழங்கிய செய்திகளையே பதிவு செய்துள்ளன.

பிராகிருதத்தில் 'லெணே' என்பது குகையை குறிக்கின்றது. மட்டக்களப்பில் உள்ள அனேகமான கல்வெட்டுக்களில் இச்சொல் காணப்படுகின்றது. அதுமட்டுமின்றி குகைகளுக்கு பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன.Sudassana(சுடாஸ்ஸன)(389), Manorame(மனோரமே)(391, 407, 408) என்பவை குறிப்பிடத்தக்கவை.

389- உபராஜ நாக புத ராஜ அபய நம தஸ புத பமனி திஸ நம தென கரிடே சுடாஸ்ஸன ஸகஸ
391- மனோரமே லெணே பத குதேனே கரித ஸகஸ

**2. தானம் பெற்றோர்**

பிராமிக் கல்வெட்டுக்களில் தானம் பெற்றோர் பற்றிக் கூறுகின்றவிடத்து பொதுவில் 'சங்கத்தார்' என்றே கூறப்படுகின்றது. இது பிராகிருதத்தில் 'ஸகஸ' என வருகின்றது. பௌத்த துறவிகள் தாம் தானமாகப் பெறுகின்ற அனைத்துப் பொருட்களையும் சங்கத்தின் பொதுப் பெயரிலேயே பெற வேண்டும் என்பது அவர்களது சங்க விதியாகும். வரலாற்றில் வட்டகாமினி அபய மன்னனது காலத்தில் தமக்கு ஆதரவு வழங்கிய துறவிக்கு பெயர் கூறி அபயகிரி விகாரை வழங்கப்பட்டமையால் தேரர் மகாவிகாரையிலிருந்து ஒதுக்கப்பட்டமை பற்றி பாளி நூலாகிய மகாவம்சம் குறிப்பிடுகின்றது. கல்வெட்டுக்களில் அனேக சந்தர்ப்பங்களில் தற்போதும் எக்காலத்தும் நிலைக்கத்தக்கதாக வழங்கப்பட்ட தானம் என்று குறிப்பிடப்படுகின்றன. அது பிராகிருத மொழியில் கல்வெட்டுக்களில்'அகத அனாகத' என இடம்பெறுகின்றது.

**3. தானம் வழங்கியோர்**

பிராமிக் கல்வெட்டுக்களில் தானம் வழங்கியோர் பற்றிய செய்திகளையே அதிகளவில் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதனூடாக அக்காலத்தில் மட்டக்களப்பு தேசத்தில் வாழ்ந்த மக்கள்,

அவர்களது பெயர்கள், உறவுப் பெயர்கள், பட்டப்பெயர்கள், இனப் பெயர்கள் என்பவற்றை இனங்காண முடிகின்றது. அதுமட்டுமின்றி இப்பெயர்களினூடாக தமிழ் மொழிச் செல்வாக்கையும் உறுதிப்படுத்த முடிகின்றது. அவற்றிலே பருமக(ன்), பருமகள(பருமகள்), மருமகன(மருமகன்), மருமான, மருகமாற, ஐ, வேள(வேள்), ப(ா)ளி முதலான பல தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்ச் சொற்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டமையினால் அம்மொழியினது இலக்கண மரபுகளுக்கு ஏற்ப அவற்றை எழுதியுள்ளனர். பிராகிருதத்தில் சொற்கள் மெய்யெழுத்தில் முடிவதில்லை. அவை பொதுவாக உயிரேறி வரும். எனவே மருமகன், மருமான், பருமகள் எனும் சொற்கள் முறையே மருமகன, மருமான, பருமகள என்று எழுதப்படும்.

இந்தப்போக்கை மட்டக்களப்பு பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணலாம். அவற்றிலும் பருமக, மருமக, அபய, நாக, தேவநம்பிய, காமின திஸ, உதி, உதய, சிவ, வேள், ராஜ, விஸாக, சுமண குத்த, நாக பவத்த முதலான பல்வேறு சொற்கள் இடம்பெறுகின்றன. இதில் தமிழ்ப் பெயர்கள் பிராகிருத மயப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழகக் கல்வெட்டுக்களில் சில பிராகிருதப் பெயர்கள் அப்படியே எழுதப்பட்டிருக்கும் போது அதே பெயர்கள் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழ் மயமாக்கப்பட்டுள்ளன.

**3.1 ஆட்பெயர்கள்:**

3.1.1 சிவ - அரசர், இளவரசர், வணிகர், கிராமவாசிகள், தலைவர், கஹபதி என்னும் குடும்பத் தலைவர் முதலானோர் 'சிவ" என்ற பெயரைக் கொண்டிருந்தனர். இதன் மூலம் சிவனைப் போற்றி வழிபடும் மனப்பாங்குடையோர் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்துள்ளனர். பல இனங்களைச் சேர்ந்தவர்களும் பல சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் சிவனை வழிபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நியன்டரவகல (401,402), ரஜகல (431,443,449,450), தமண (478), பம்பரகஸ்தலாவ (518), விகரகல்கந்த(537) முதலான கல்வெட்டுக்களில் 'சிவ' என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. நியன்டரவகல கல்வெட்டு சுத, சிவ எனும் இருவர் இணைந்து சங்கத்தாருக்கு வழங்கிய தானம் பற்றிக் கூறுகின்றது. ரஜகல கல்வெட்டுக்களில் (431,449,450) பௌத்த சமயத் துறவிகளான சங்கத்தார் சிவ என்ற பெயரைச் சூடியிருந்தமை பற்றிய குறிப்புண்டு. பம்பரகஸ்தலாவ கல்வெட்டில்(1178) வரும் 'உபஸிக சிவல' என்பதன் மூலம் பௌத்த சமய பெண் விசுவாசியின் பழைய சமய நம்பிக்கையாகிய சிவ வழிபாடு பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. உபாசகனான சிவ (உபாஸக சிவ - 478) பற்றி தமணக் கல்வெட்டுக் கூறுகின்றது. இவன் பௌத்த மதத் துறவியான மித்தவின் தந்தையாக இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றான். சிவ ரக்கித(557), சிவ பூதிய(443) என்போர் பத குலத்தைச் சேர்ந்தவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர், சிவ பூதிய(443) -சிவனின் அருள் பெற்றவன், சிவ

ரக்கித, சிவ குத்த- சிவனால் பாதுகாக்கப்பட்டவன், சிவ தத்த- சிவனால் அளிக்கப்பட்டவன் என்றவாறு கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளது. கஹபதி சிவ, உபாசக சிவ, உபாசிகா சிவ, சிவ தேர, பத சிவ, நந்தி தேர, பருமக நந்தி என்றவாறு சிவ என்னும் பெயர் இணைந்து வருகின்றது. இவற்றிலிருந்து மட்டக்களப்பின் தொன்மையான வழிபாடுகளுள் ஒன்றாக பௌத்தம் இலங்கையில் அறிமுகமாக முன்னர் சிவ வழிபாடு நிலைபெற்றிருந்தமை புலனாகின்றது.

3.1.2 விசாஹ: 'விசாஹன்' என்பது மியுண்குணாவெகெரக் கல்வெட்டில்(413) 'விஸாஹ'என வருகின்றது. இது முருகனின் பெயர்களுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. அதில் கபதி விசாஹ என்பவனது குகை என வருகின்றது.

3.1.3 கண: விகாரெகலவில் உள்ள இரு கல்வெட்டுக்களில்(531,532) பருமக கண என்று எழுதப்பட்டுள்ளது. இங்கு வருகின்ற கண என்பது கண்ணன் என்பதன் பிராகிருத மயமாக்கமே ஆகும்.[2] மியுண்குணாவெகெரக் கல்வெட்டில்(420) 'உபஸிக கண' என்றும், மற்றுமொரு கல்வெட்டில்(415) 'அபி கண' எனவும் வருகின்றது.

**3.2 பதவிப் பெயர்கள்**

3.2.1 பருமக:

'பருமக' என்பது நிர்வாகத்தில் நாட்டினது முதுகெலும்பாக விளங்கிய செல்வச் செழிப்புடைய ஒரு வகுப்பினர் சூடியிருந்த விருதே இதுவாகும். இப்பதத்துடன் இதன் பெண்பால் வடிவமாகிய 'பருமகள' (பருமகள்) என்ற பதமும் பிராமிக் கல்வெட்டுக்களில் பரவலாகக் காணப்படுகின்றது. பரணவிதான அவர்கள் இதனை பருமகளு என வாசிக்கின்றார். பருமக, பருமகள என்பன பழைய சிங்களச் சொல் எனவும், வடமொழியிலுள்ள 'பிரமுக' என்பதன் வழிவந்த சொல்லெனவும் கூறியுள்ளதோடு பாளி மொழிச் சொற்களான பமுக்கோ, பாமொக்கோ ஆகியவற்றுக்கும் இதற்கும் தொடர்புண்டு எனவும் கூறுகின்றார்.[3] ஆனால் பிரமுக என்ற சொல்லுக்கும் பருமக என்ற சொல்லுக்கும் எதுவத தொடர்பும் இல்லையென்பதை தகுந்த விளக்கத்துடன் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள் தனது யாழ்ப்பாணம் - தொன்மை வரலாறு எனும் நூலில் விளக்கியுள்ளார்.

'பருமக'(பருமகன்) என்போர் பெரும்பாலான கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றனர். இது தலைமையாளரைக் குறிக்கவே பயன்பட்டுள்ளது. அதாவது இது வெவ்வேறு சமுதாயப் பிரிவுகளின் தலைமைப் பதவியைக் குறிக்கும் சொல்லாகும். இவர்கள் நாக, வேள் போன்ற குறுநில அரசர்களின் நிர்வாகத்திற்கு பங்கு கொண்டோராவர்.[4]பருமக எனும் பட்டத்தை தாங்கிய நாக என்பவன் கொதிமத என்ற இன்னொருவனோடு சேர்ந்தளித்த குகை பற்றி

பம்பரகஸ்தலாவ(507) கல்வெட்டுக் கூறுகின்றது. குசலன்கந்த (393), க஌ுதுபொத்தான(397), உமுனகல(403), ரஜகல(435), சங்கமண்கண்டி(488), பணம(495), கிரலண(496,497), குடும்பிகல(498), பம்பரகஸ்தலாவ (507,515,516), கொங்கல(547) முதலான இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் இது இடம்பெற்றுள்ளது.[5] பருமக அகி, பருமக வேலே, பருமக வராலி முதலான பல பெயர்கள் பருமக என்னும் பதத்துடன் இணைந்து வருகின்றது.

3.2.2 வேள்:

இலங்கையில் உள்ள 21 கல்வெட்டுக்களில் 'வேள்' என்ற பதம் காணப்படுகின்றது. மட்டக்களப்பில் முள்ளிக்குளம் மலை(481), விகாரகல(விகார கல்)(529) ஆகிய கல்வெட்டுக்களில் இச்சொல் காணப்படுகின்றது. முள்ளிக்குளம் மலை கல்வெட்டில் 'உபாசக தனக வேள தனே' என வருகின்றது. ஆனால் செ.பரணவிதான அவர்கள் அதனை'வேளு' என வாசித்துள்ளமை கவனத்திற்குரியது. ஆனால் இது சங்க காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த'வேளிர்' எனப்படும் குறுநில அரசர்களைக் குறிக்கப் பயன்படும் சொல் என்பது தெளிவு. இது ஒரு பட்டப் பெயராகும். பெரும்பாலும் ஆளும் வர்க்கத்துடன் தொடர்புடைய பட்டப் பெயராகவே இவை காணப்படுகின்றன. எனவே வேள் எனப்படும் சிற்றரசர் ஆட்சி மட்டக்களப்பு பகுதிகளில் நடைபெற்றுள்ளமை தெளிவாகின்றது.

3.2.3 உதி:

உதி, உபரஜ நாக எனும் பெயரைக் கொண்ட குறுநில அரசர்களும் இப்பகுதிகளில் ஆட்சி செலுத்தியுள்ளனர். உதி என்பது ஆரம்பத்தில் வம்சத்தைக் குறித்து நின்று காலப் போக்கில் இயற்பெயராக மாறியது என சங்க நூலை ஆராய்ந்தோர் குறிப்பிடுகின்றன.[6] அத்துடன் 'திஸ' என்ற பெயரில் சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள், மன்னர்கள், சிற்றரசர்கள், குறுநிலத்தலைவர்கள் எனப் பலர் இருந்ததைக் கல்வெட்டுக்கள் மட்டுமின்றி சமகால பாளி இலக்கியங்களும் கூறுகின்றன. இது திஸ, திச, திஸ்ஸ, திஸஹ, திஸய, திசஸ. திஸிய, திஸிஹ ஆகிய பெயர்கள் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளன. 'அபய' எனும் பெயரும் பரவலாகக் காணப்படுகின்றது. சிற்றரசர்களாகவும் தலைவர்களாகவும் இவர்கள் அறிமுகமாகின்றார்கள். (396, 550,535,389,429).

மட்டக்களப்பின் பல பாகங்களிலும் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் சிற்றரசர்களின் ஆட்சி நடைபெற்றுள்ளமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதன் மூலம் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் அதிகாரமானது ஒரே மையத்தில் குவிந்திராது வெவ்வேறு பிராந்தியங்களில் சுதந்திரமான பல அமைப்புக்கள் இருந்துள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இது புரதான காலம் பற்றி மகாவம்சம் கூறும் தகவலுக்கு முரணானவையாகக் காணப்படுகின்றன. இந்நூல் ஆரம்ப காலம் முதலாக லங்கா தீபம் ஒரு இராச்சியமாக

இருந்தது என்றும் அனுராதபுர மன்னர்களே எங்கும் ஆட்சி செலுத்தினார்கள் என்றும் கருதத்தக்க வகையில் இலங்கையின் வரலாற்றினை அமைத்துள்ளது. ஆனால் பிராமிச் சாசனங்களின் மூலம் இவ்விடயம் தொடர்பில் தெளிவாக்கம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. சம காலத்தில் அனுராதபுரத்தை மையமாகக் கொண்ட ஒரு ஆட்சி நடைபெற்ற அதேநேரம் நாட்டின் பல பாகங்களிலும் சுதந்திர சிற்றரசுகள் நிலவியுள்ளது.

3.2.4 ராஜ(ராஜா):

ரஜ, கமனி எனும் பட்டத்துடன் பலரின் பெயர்கள் கல்வெட்டுக்களில் வருகின்றன. உபரஜ நாக(389,487), ரஜ அபய(389), மஜிமரஜ(406), தே₃வநபிய மஹரஜ(422,423,428), அபய மஹரஜ(429), தமரஜ(549,551), உதி ரஜ(550) போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவை அரசர்களைக் குறிக்க பயன்படுத்தப்பட்டவையாகும். உபரஜ நாக என்பவனை கதிர்காம சத்திரிய வம்சத்தின் பத்து சகோதரர்களுள் இளையவனாக குணவர்த்தன அவர்கள் அடையாளங் காண்கின்றார்.[7]

மஜிம, மஜிமரஜ என்பவை ‘மீனவன்’ என்ற பதத்தைக் குறிக்கும் பாளிச் சொற்களாகும். மீனவன் என்பது தமிழகத்தின் பாண்டியரைக் குறிக்கப் பயன்படும் பெயராகும். எனவே இவர்களை பாண்டியர் வம்சத்தவர்களாக அடையாளங் காணமுடிகின்றது.[8]

**3.3 இனப்பெயர்**

3.3.1 தழிழர்:

அக்கரைப்பற்று குடுவில் (480)எனுமிடத்தில் கிடைத்துள்ள சாசனம் முக்கியத்துவம் வாய்ந்தது. இது கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்குரியதாகும். ‘ திகவாபி ரன வணிகன .. .. ... .. .. .. ய புதன ப₃ரியய த₃மேட திஸய லெனே’ என இதில் எழுதப்பட்டுள்ளது. ‘தமிழர்’ என்பது ‘தமேட’ என பிராகிருதமயப்படுத்தப்பட்டு இங்கு எழுதப்பட்டுள்ளமை சிறப்பானது. அதாவது தீகவாபி எனுமிடத்தில் வாழ்ந்துள்ள தமிழர் பற்றி இச்சாசனம் குறிப்பிடுகின்றது. தமிழர் மட்டக்களப்பு தேசத்தில் பூர்வீககாலமாக வாழ்ந்துள்ளமைக்கு இது மற்றுமொரு சான்றாகும்.

3.3.2 நாகர்

இலங்கையின் பூர்வீக குடிகளாக இயக்கர், நாகர் என்போர் கருதப்படுகின்றனர். இவர்களில் நாகர் மட்டக்களப்பில் வாழ்ந்தமைக்கான சான்றுகள் பிராமிக் கல்வெட்டுக்களில்

காணப்படுகின்றன. 'நாக' என்ற பெயரைச் சூடிய பலர் பௌத்த சமயத்திற்கு வழங்கிய கொடை பற்றி இவை கூறுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய மூன்று கல்வெட்டுக்களிலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள 5 கல்வெட்டுக்களிலும் இப்பெயர் வருகின்றது. இது தனிப்பெயராகவும், 'நாக' என்ற பெயரைத் தாங்கிய குறுநில அரசரின் பெயராகவும் இவற்றில் உள்ளது. பாளி நூல்களிலும் தமிழ் நூல்களிலும் நாக அரசர்கள் பற்றிக் காணப்படும் ஐதீகங்கள் இதற்குச் சான்றாகின்றன.[9] மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலும் நாகர் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

அம்பாறை பம்பரகஸ்தலாவ(507) எனுமிடத்திலுள்ள கல்வெட்டில் அரசனது அரண்மனையிற் சமையற்கூட மேற்பார்வையாளனான பருமக என்ற பட்டத்தைச் சூடிய நாக குலத்தைச் சேர்ந்த ஒருவனைப் பற்றிக் கூறுகின்றது. இங்குள்ள மற்றுமொரு கல்வெட்டில் (522) 'நகபவத'(நாகபப்பத) என வருகின்றது. இது நாகபர்வத (நாகமலை) என்ற பதத்திலிருந்து மருவியிருக்கலாம்.[10] மட்டக்களப்பு குசலன்கந்த கல்வெட்டில்(389) குறிப்பிடப்படும் உபரஜ நக(உபராஜ நாக), ரஜ அபய(ராஜ அபய), ரஜ கமணி திஸ (ராஸகாமணி திஸ) எனவரும் பெயர்கள் துட்டகைமுனுவின் முன்னோர்களாக மகா நாக, கோத்தபய, காக்க வண்ண திஸ ஆகியோரையே குறிக்கிறது என பரணவிதான அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.[11] இதனை ஆராய்ச்சியாளர்கள் மறுத்துள்ளனர். மொட்டயகல்லு எனுமிடத்திலுள்ள கல்வெட்டில் (487)உபரஜ நக, ரஜ அபய, ரஜகமணி திஸ ஆகிய மூன்று சந்ததியினர் குறிப்பிடப்பட்டுள்ளனர். முன்னர் இருந்த பரணவிதான அவர்களின் வாசிப்பான 'தசபதிகரண ஜவகண்ய உபரஜ நக' என்பது திருத்தப்பட்டு 'தசபதிகரண சககணய உபரஜ நக' என மீள குணவர்த்தன அவர்களால் வாசிக்கப்பட்டது. அவ்வாறாயின் அதன் பொருள் பத்துச் சகோதரர்களுள் இளையவனாகிய உபராஜ என்பதாகும். இதனால் தேவநம்பிய தீஸனின் தம்பியாகிய உபராஜ மகாநாக திஸமகாராமவில் மட்டும் அரசோச்ச, கதிர்காமச் சத்திரியர்களின் இளைய சகோதரனாகிய மகாநாகவின் ஆட்சி மட்டக்களப்பு தேசத்தில் பரந்திருந்தது எனக்கொள்ளமுடியும்.[12]

### 3.3.3 பத

'பத' எனும் பெயர் மட்டக்களப்பு தேசத்தில் உள்ள 21 கல்வெட்டுக்களில் இடம்பெறுகின்றது. இலங்கையின் ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் இச்சொல் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளில்'பரத(ர்)' எனும் சமூகப் பிரிவினரின் பெயர் காணப்பட்ட போதிலும் இங்கு கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் இப்பெயரைக் காணமுடியவில்லை. எனினும் பத, பரத இரண்டும் ஒரே இனக்குழு அல்ல என்பது பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் கருத்தாகும். மட்டக்களப்பு தேசத்தில் உள்ள எந்தவொரு சாசனமும் பத என்னும் பெயரைக் குறிப்பிடும் இடத்து பருமக என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. எனவே பருமக என்னும் சொல் ஆதியில் பத என்னும் குழுவினரிடையே வழங்கவில்லை

என்றே கருதலாம். பத என்போர் தமிழ் மொழி வழங்கும் பகுதிகளில் பிராகிருதமும் பரவுவதற்கு முன் இலங்கையில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளின் ஒரு பகுதியினர் என்று கொள்வதே பொருத்தமானது.[13]

### 3.4 பெண்களால் வழங்கப்பட்ட தானங்கள்

பல்வேறு கல்வெட்டுக்களில் தானம் கொடுத்தோர் பற்றிய செய்திகளில் பெண்களின் பெயர்களும் இடம்பெறுகின்றன. கல்வெட்டொன்றில் 'பருமக சடனவின் மனைவி உபாசிகை சுமணவின் குகை' (397)என வருகின்றது. மற்றுமொரு கல்வெட்டில் கண என்னும் உபாசிகையினுடைய குகை(415) என்றும் உபாசிகை சமிடத்தவின் குகை என்றும் பல பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

பொதுவாக நோக்குகின்ற போது மட்டக்களப்பு பிராமிக் கல்வெட்டுக்களில் பௌத்த சமயத் துறவிகளுக்கு சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும் இருந்த மக்களால் வழங்கப்பட்ட தானங்கள் பற்றிய செய்தியையே பதிவு செய்கின்றன. ஆயினும் எதிர்காலத்தில் இப்பிராந்தியங்களில் முறையான தொல்லியல் அகழ்வாய்வுகள் நடாத்தப்படுகின்ற போது ஏராளமான பிராமிச் சாசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அது மட்டக்களப்பின் வரலாற்றில் புதிய விடயங்களை வெளிக்கொண்டுவரும் என்பது திண்ணம்.

### அடிக்குறிப்புகள்

[1] Paranavitana.S, Inscription of Ceylon, vol-01, Colombo, 1970

[2] சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 238

[3] சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1993, ப-110

[4] சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1993, ப-111

[5] Paranavitana.S, Inscription of Ceylon, vol-01, Colombo, 1970

[6] Dorai Rangaswamy.MA, The surname of the cankam age Literary and Tribal, (Madras), 1968, pp-39,43

[7] சிற்றம்பலம்.சி.க, யாழ்ப்பாணம் - தொன்மை வரலாறு, யாழ்ப்பாண பல்கலைக் கழக வெளியீடு, 1993, ப-112

[8] தங்கேஸ்வரி.க, கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், 2007, ப- 102

[9] சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 123

[10] சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 125
[11] சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 125

[12] சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 199

[13] www.puthinappalakai.com